# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : DVC 39/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-3 | Village: | |
| Name | : ஜாமலுர் ரகுமான் சாகிப் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : அப்துல் ஹமீது சாகிப் | Age47: | |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 25.10.2024.**

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் நாகூர் அலுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் ஆன்மீகப் பேரவை யில் காஜியாக இருநது வருகிறேன். . நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன். 05.04.2019 ந் தேதியிட்ட நிக்காஹ் சான்றிதழின் அசலை எடுத்து வந்துள்ளேன். அதன் அசல் எங்கள் அலுவலக பயன்பாட்டுக்கு தேவை என்பதால் அதன் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன. ( மேற்படி நிக்காஹ் சான்றிதழின் உண்மை நகல் சா,சா. ஆ, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது), மேற்படி திருமணம் ஜாகீர் உசேன் மற்றும் ரசியா பானு ஆகியோருக்கு நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்துக்காக பதிவுப்புத்தகத்தின் அசலை எடுத்து வந்துள்ளேன். அதன் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். ( மேற்படி பதிவு புத்தகத்தின்

உண்மை நகல் சா.சா. ஆ. 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. ) ஜாகீர் உசேனின் தந்தை பெயர் அப்துல் ரகீம், அவரது முகவரி 1 A முஸ்லீம் மேட்டுத் தெரு ஆடுதுறை ஆகும். ஜாகீர் உசேன் மற்றும் ரசியா பானு திருமணத்தின் போது எங்களிடம் ஆணையுறுதி ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள். அதன் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். ( மேற்படி ஆணையுறுதி ஆவணத்தின் உண்மை நகல் சா.சா. ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) மேற் படி திருமணத்தின் போது இரு தரப்பினர் மற்றும் சாட்சிகள் அவர்களது அடையாள அட்டைகளை கொடுத்துள்ளார்கள். மேற்படி திருமணம் 05.04.2019 ந் தேதி நடந்தது என்றால் சரிதான். மேற்படி திருமணத்தை ஒப்புக்கொண்டு ஜாகீர் உசேன் மற்றும் ரசியா பானு திருமணப்பதிவு புத்தகத்தில் கைரேகை மற்றும் கையொப்பம் செய்துள்ளார்கள். ஜாகீர் உசேனின் செல்போன் எண்ணும் எழுதப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தான் மேற்படி ஜாகீர் உசேன் ஆவார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

மனுதாரரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை யார் எடுத்து வரச்சொன்னார்கள் என்றால் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் கேட்கப்பட்டுள்ளது. பொதுவாக இணைச்செயலாளர் மற்றும் காஜி ஆகியோர்களை நியமனம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்படுமென்றால் சரிதான். நான் தான் காஜி என்பதை காட்டுவதற்கு தீர்மானம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்மானம் எழுதிக்கொள்ளப்படவில்லை. வாய் மொழியாக போடப்பட்டுள்ளது. அவ்வாறு வாய் மொழியாக தீர்மானிக்கப்பட்ட பிறகு அதனை எழுதிக்கொள்ளும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நேரடியாக லெட்டர் பேடில் பெயர்கள் பதிவு செய்யப்படும். திருமண சான்றிழதழ் மற்றும் திருமணப்பதிவுப்புத்தகத்தில் நான் தான் தலைவர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. காஜி என

குறிப்பிடப்பட்டு எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. காஜி சட்டப்படி காஜியை நியமனம் செய்வதற்கு எழுத்து பூர்வமாக தீர்மானம் நிறைவேற்றபடவேண்டுமென்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. திருமணப் பதிவுப்புத்தகத்தில் உள்ள விபரங்களை யார் பூர்த்தி செய்தது என்றால் நான் தான் பூர்த்தி செய்தேன். திருமணப் பதிவு புத்தகத்தில் ஜாகீர் உசேனின் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். பொதுவாக இஸ்லாமிய ஆண் நபர் ஒருவர் முதல் மனைவி இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்யமுடியயுமா என்றால் முடியும் , திருமணம் தொடர்பாக நான் இதற்கு முன்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இது தான் முதல் முறை. காஜி சட்டத்தின் படி நான் முறைப்படி காஜியாக நியமிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. திருமணப் பதிவு ப் புத்தகம். இஸ்லாமிய முறைப்படி முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக திருமணத்தின் போது முதல் மனைவி குறித்து நாங்கள் விசாரணை செய்வோமா என்றால் அந்த ஆணிடம் கேட்டு அவர் சொல்வதை பதிவு செய்து கொள்வோம். திருமணப் பதிவு புத்தகத்தில் முதல் மனைவி குறித்து பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். திருமணப் பதிவு புத்தகம் மற்றும் சான்றிதழ் எங்களால் தயார் செய்யடுகிறது என்றால் சரிதான். திருமணம் நடந்ததா என்றால் இல்லையா என்பது குறித்து சாட்சிகளை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரியல்ல. திருமணத்தை நடத்தி வைத்தது நான் தான். சாட்சிகளுக்கும் தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல எந்த திருமணமும் நடைபெறவில்லை என்றால் சரிதான், நான் திருமணம் செய்து வைத்த அனைத்து நபர்களையும் நேரடியாக பார்த்தேன் என்றால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது.

**மறுவிசாரணை**

திருமண பதிவுப்புத்தகத்தில் மணமகள் மற்றும் மணமகளின் புகைப்படம் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் எடுத்து வந்துள்ள திருமண பதிவுப்பத்தகத்தில் 173 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் புகைப்படங்கள் எதுவும் ஒட்டப்படவில்லை.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.28 19:52:36 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**